2018 ஜூன் 28]

(இ) பேரவை அலுவலில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவை அலுவலில் மாற்றம். 5–7–2018, 6–7–2018 மற்றும் 9–7–2018 ஆகிய நாட்களில் எடுத்துக்கொள்ளப்படுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 38–பொதுத் துறை, கோரிக்கை எண் 1–மாநிலச் சட்டமன்றம், கோரிக்கை எண் 2–ஆளுநர் மற்றும் அமைச்சரவை, கோரிக்கை எண் 16–நிதித் துறை, கோரிக்கை எண் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, கோரிக்கை எண் 36–திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, கோரிக்கை எண் 50–ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் மற்றும் கோரிக்கை எண் 35–பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை ஆகியன 5–7–2018 மற்றும் 9–7–2018 ஆகிய நாட்களில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பெறும் என்பதையும், 6–7–2018 அன்று பேரவைக் கூட்டம் இல்லை என்பதையும் பேரவையின் அனுமதியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

10. மானியக் கோரிக்கைகள், 2018–2019, விவாதமும் வாக்கெடுப்பும்–*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 15–சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 10–வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

(இ) கோரிக்கை எண் 11–முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

(அ) கோரிக்கை எண் 15–சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2018–2019 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 15–சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை). மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.*